அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI

Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



அ.எண் : 22 / 2018
தேதி : 06.02.2018

திருச்செந்தூர் கோவில் தக்காராக திரு.கண்ணன் ஆதித்தன் நியமனம்

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்
நிறுவனத்தலைவர் ரா.சரத்குமார் வாழ்த்து

திருச்செந்தூர் கோவில் தக்காராக திரு.கண்ணன் ஆதித்தன் நியமிக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனாரின் மூத்த மகன் இராமச்சந்திர ஆதித்தனின் மகனும், 'மாலை முரசு' பத்திரிக்கையின் நிர்வாக இயக்குனருமான திரு.இரா.கண்ணன் ஆதித்தன் அவர்களை திருச்செந்தூர் கோவில் தக்காராக நியமித்து தமிழக அரசு செய்தி வெளியிட்டிருப்பது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது.

தக்காருக்கான முழுதகுதி இருப்பதாலும், பாரம்பரியமாக ஆன்மீகம் பின்பற்றும் குடும்பத்தில் இருந்து வந்தவர் என்பதாலும், தக்கார் பதவிக்கு பெருமை சேர்க்கும் விதமாக இரா.கண்ணன் ஆதித்தன் அவர்களுக்கு பொறுப்பு வழங்கப்பட்டிருப்பது பெருமிதம் அளிக்கிறது.

இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுபாட்டில் உள்ள இத்திருக்கோவிலுக்கு தமிழகம் மற்றும் பிற மாநிலங்களிலிருந்தும் பெருமளவில் சுவாமி தரிசனம் செய்ய வரும் மக்களின் பாதுகாப்பையும், ஆலய நிர்வாகங்களையும், தங்களது திறமைக்கு அளிக்கப்பட்ட கூடுதல் பொறுப்பாக கருதி, உங்கள் பணி சிறக்க என் நெஞ்சார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்து கொள்கிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ரா.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com